# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. தமிழ்மொழியில் உள்ள உயிர்மெய் எழுத்துகள்

________________________ .

(216, 18, 217)

2. இலக்கண நூல்களில் முதன்மையானது ________________________ .

(தொல்காப்பியம், சிலப்பதிகாரம், திருக்குறள்)

3. எந்தச் செயலையும் அரைகுறையாகச்________________________ .

(செய்யுங்கள், செய்வோம், செய்யாதீர்கள்)

4. காட்டு அரசன் என்று கூறப்படும் விலங்கு

________________________ .

(முயல், நரி, சிங்கம்)

5. இராவணனது சிறப்புகள் பற்றி விரிவாகக் கூறும் நூல்

________________________ .

(இராவணகாவியம், சிலப்பதிகாரம், திருக்குறள்)

6. தமிழுக்குரிய சிறப்பு எழுத்து ________________________ .

(லகரம், ளகரம், ழகரம்)

7. மருந்துக்குணம் உள்ள கனி ________________________ .

(பாலாக்கனி, நெல்லிக்கனி, மாங்கனி)

8. போர்முரசைப் ________________________ என்றும் அழைப்பர்.

(கொடைமுரசு, படைமுரசு, மணமுரசு)

9. தமிழரின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்று

________________________ .

(வாரோட்டம், கூடைப்பந்தாட்டம், காற்பந்தாட்டம்)

10. எல்லாளன் இலங்கையை ________________________

ஆண்டுகள் ஆண்டான்.

(நாற்பது, நாற்பத்துநான்கு, முப்பத்துநான்கு)

11. **பழமொழி :-**

மன்னன் எவ்வழி மக்கள் ________________________ .

(பலவழி, ஒருவழி, அவ்வழி)

12. மீன்களில் மிகப்பெரியது ________________________ .

(திமிங்கிலம், சுறா, மட்டி)

13. மருந்துப் பண்புகளை உடைய மரம் ________________________ .

(மா, வேம்பு, பனை)

14. அப்பா அடுத்த கிழமை புதிய மிதியுந்து ________________________ .

(வாங்கினார், வாங்குகிறார், வாங்குவார்)

15. கைகளில் கோல்களை வைத்து ஆடும் ஆட்டம்

________________________ .

(கோலாட்டம், துடுப்பாட்டம், சிலம்பாட்டம்)

16. **நொடி:-**

ஓடுவான் ; பறப்பான் ; ஒற்றைக்காலில் நிற்பான்.

அவன் யார்? ________________________

(காகம், கொக்கு, கிளி)

17. ஆடிப்பாடச் சிறுவர்களுக்கு அரங்கமாகிவிடும் மரம்

_________________________ .

(ஆலமரம், பனைமரம், முருங்கைமரம்)

18. சிறுவனால் பாடல் _________________________ .

(பாடப்பட்டது, பாடினான், பாடுகிறான்)

19. குறள் :-

இனிய உளவாக இன்னாத _________________________

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

(கூறல், கூரல், கூற்றல்)

20. தோற்கருவி என்பதைப் பிரித்து எழுதினால் _________________________ .

(தோற்+கருவி, தோற்க்+கருவி, தோல்+கருவி)

21. சிறுமி _________________________ எனச் சிரித்தாள்.

(கலகல, மளமள, பளபள)

22. வேரால் உண்ட நீரை இளநீராய்த் தருவது

_________________________ .

(மா, தென்னை, பலா)

23. எறும்புகள்_________________________ ஊர்ந்து சென்றன.

(திரள்திரளாக, படிப்படியாக, சாரிசாரியாக)

24. அவை எல்லாம் நல்ல நூல்களே _________________________

உனக்குத் தேவையானதை மட்டும் படி.

(இவற்றுள், ஒவ்வொன்றும், அவற்றுள்)

25. ஓட்டுயிரிகளில் ஒன்று ______________________ .

(சுறா, மீன், ஆமை )

26. கடல் நீர் என்பது ______________________ .

(நன்னீர், வெந்நீர், உவர்நீர்)

27. பழனம் என்பது ______________________ .

(காடு, வயல், பூங்கா)

28. சி.வை.தாமோதரம்பிள்ளை பிறந்த ஊர்

______________________ .

(சிறுப்பிட்டி, நாவாலி, திருகோணமலை)

29. மாலை + பொழுது என்பதைச் சேர்த்து எழுதினால்

______________________ .

(மாலைபொழுது, மாலைப்பொழுது, மாலைய்ப்பொழுது)

30. திருகோணமலை இலங்கையின் ______________________த்

திக்கில் அமைந்துள்ளது.

(வடக்கு, தெற்கு, கிழக்கு)

| புள்ளிகள் 30 |
|---|

## 2) கீழே தரப்பட்டுள்ள சொல்லியங்களில் கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| நறநற | மேடும்பள்ளமும் | வண்ணவண்ண |
| விறுவிறு | நினைக்கநினைக்க | |

1. அவர்கள் சென்ற வழி ______________ ஆக இருந்தது.

2. பூஞ்சோலையில் ______________ப் பூக்கள் பூத்திருக்கின்றன.

3. மறவன் சினத்தால் பற்களை ______________ எனக் கடித்தான்.

4. நண்பன் கூறிய நகைச்சுவையை ______________ எழிலனுக்குச் சிரிப்பு வந்தது.

5. தேர்வுக்கு நேரமாகிவிட்டதால் இலக்கியா ______________ என்று நடந்து சென்றாள்.

| புள்ளிகள் 05 |
|---|

## 3) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி; கருத்துள்ள சொல்லியமாக்குக.

1. திட்டம் / போட்டது / அழிக்கத் / சிங்கத்தை / முயல்

_______________________________________________

_______________________________________________.

2. கொடுத்தாள் / வன்னியா / தம்பிக்குப் / பரிசு

_______________________________________________

_______________________________________________.

3. பிள்ளை / குடிக்கும் / அழுத / பால்

_______________________________________________

_______________________________________________.

4. முயன்றது / பறவைக் / பறக்க / குஞ்சு

_______________________________________________

_______________________________________________.

5. கவிதையைப் / கனிமொழி / படித்தாள் / சிறப்பாகக்

_______________________________________________

_______________________________________________.

| புள்ளிகள் 05 |
|---|

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி; சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. நாங்கள் சென்ற மாதம் சுற்றுலாச் ______________________ .

2. ஆடிப்பிறப்பன்று ஆடிக்கூழ் காய்ச்சிக் ______________________ .

3. சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் ______________________ .

4. திருகோணமலையைத் திருமலை என்றும் ______________________ .

5. நல்ல நண்பர்களின் நட்பே நமக்கு உயர்வைத் ______________________ .

| புள்ளிகள் 10 |
|---|

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| உறவும் | நண்பர்களும் | மக்கள் |
| விழாக்களை | பெருவிருப்புடன் | |

உலகில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த ______________________. வாழ்கின்றனர். அவர்கள் வெவ்வேறு வகையான ______________________க் கொண்டாடுகின்றனர். உலகமக்கள் யாவரும் விழாக்களை ______________________ வரவு பார்த்திருந்து கொண்டாடுவர். இவ்விழாக்களில் உறவினர்களும் ______________________ இனத்தவர்களும் ஒன்று கூடுவர். அன்பும் ______________________ புரிந்துணர்வும் மேலோங்க விழாக்கள் பெரிதும் உதவுகின்றன.

புள்ளிகள் 10

## 6) கீழேயுள்ள பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழருடைய பண்பாட்டில் மிகவும் சிறந்தது விருந்தோம்பல். தம்மை நாடி வருபவரை அன்புடன் உபசரித்து வரவேற்பது தமிழரின் பண்பாடு. தமிழர் ஒருவரை ஒருவர் காணும்போது வணக்கம் கூறுவர். வீட்டுக்கு வரும் விருந்தினரை அன்புடன் இன்சொல் பேசி வரவேற்பர். வீட்டுக்குக் களைத்து வருபவர்களுக்கு முதலில் குடிப்பதற்கு தேநீர், மோர் போன்றவற்றை வழங்குவர். பின்னர் விருந்தினரின் பசியைப் போக்க அறுசுவை உணவை உண்ணக் கொடுப்பர். விருந்தோம்பல் பற்றித் திருக்குறளில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

1. தமிழருடைய பண்பாட்டில் மிகவும் சிறந்தது எது?

_______________________________________________

_______________________________________________

2. யாரை அன்புடன் இன்சொல் பேசி வரவேற்பர்?

_______________________________________________

_______________________________________________

3. வீட்டுக்கு வருபவர்களுக்குக் குடிப்பதற்கு எவற்றைக் கொடுப்பர்?

_______________________________________________

_______________________________________________

4. விருந்தினரின் பசியைப் போக்க எவ்வகை உணவைக் கொடுப்பர்?

_______________________________________________

_______________________________________________

5. விருந்தோம்பல் பற்றி எதில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது?

_______________________________________________

புள்ளிகள் 10

## 7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. தமிழில் உள்ள மெய் எழுத்துகள் எத்தனை?

______________________________________________

______________________________________________

2. தமிழரின் கொண்டாட்டங்கள் எவை?

______________________________________________

______________________________________________

3. தோலினால் ஆன இசைக்கருவிகளை எப்படி அழைப்பர்?

______________________________________________

______________________________________________

4. சிங்கம் முயல் மீது ஏன் சினம் கொண்டது?

______________________________________________

______________________________________________

5. கிளித்தட்டில் மறிக்கும் கன்னையின் தலைவரை எப்படி அழைப்பர்?

______________________________________________

______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**8) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிட மொழியில் எழுதுக.**

1. பழம் - ______________________________

2. தொடருந்து - ______________________________

3. கணினி - ______________________________

4. பட்டம் - ______________________________

5. குதிரை - ______________________________

| புள்ளிகள் 05 |
|---|

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.



புள்ளிகள் 15